# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: STC 218/2025
# வழக்கு சாட்சி :PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | வயது | : | 49/2026 |
| தந்தை பெயர் | : | ராமகோனார் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | ஆரியகோன்பட்டி | தாலுக்கா | : | |

**Solemnly affirmed by Thiru.Veeramanikandan , JA of this Court in accordance with the provisions of Act X of 1873**

**Accused Absent. Petition filed and allowed.**

**Solemnly affirmed in accordance with the Indian Oaths Act-1969 Section -6(2) on the day 18th day of August 2026.**

**As Per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No. 74663/2024/F1 - Dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**
**Adthar Card of the Witness verified.**

<u>தேதி : 18.08.2026</u>

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>

1. நான் தாக்கல் செய்துள்ள சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எதிரி எவ்வளவு கடன்பெற்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல, சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும், மேற்சொன்ன சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் பிரமாண பத்திரிக்கையில் காசோலை தொகை என்று மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எதிரியின் மனைவியிடம் M.P மளிகைகடையை ரூபாய், பதினேழுலட்டசத்து ஐம்பதாயிரத்திற்கு கிரையம் பேசி வாங்கினேன் என்றால், சரிதான். அதில் நான் கொடுத்த தொகை பதினான்கு லட்சத்து ஐம்பதாரயிரம் என்றால், சரிதான். அந்த தொகை நான் ரொக்கமாக கொடுத்தேனா என்றால், ரொக்கமாக எதிரியின் மனைவி திலகவதியிடம் கொடுத்தேன்.

2. அந்த தொகையை எங்கள் ஊர் முக்கியஸ்தர்களான ஆறுமுகம், ரெங்கசாமி, பிச்சை, சுப்பிரமணி, ராசுகுட்டி ஆகியோர் முன்னிலையில் கொடுத்தேன் என்றால், சரிதான். மேற்சொன்ன மளிகைகடையை என்னிடம் ஒப்படைக்கும் பொழுது ஏற்கனவே இருந்த சாமான்களுடன் முழுவதுமாக ஒப்படைக்கப்பட்டது என்றாலும், எந்த சாமான்களும் எடுக்கப்படவில்லை என்றாலும், சரிதான். அந்த மளிகைகடையை எதிரியின் மனைவி தான் முழு நேரமாக பார்த்து வந்தார் என்றால், இல்லை இருவரும் பார்த்து வந்தார்கள். மேற்சொன்ன பணம் ரூ.பதினான்கு லட்சத்து ஐம்பதாரயிரத்தை ஒப்படைத்த அதே தேதியில் தான் கடை உரிமை மாற்றுவதற்கான ஒப்பந்த பத்திரமும் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால், சரிதான். எந்ததேதியில் அந்த பத்திரம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால், அதுபற்றி நினைவில்லை.

3. கிரையம் பெற்ற பிறகு மேற்சொன்ன எம்.பி மளிகைகடையை எப்பொழுது நான் நடத்த ஆரம்பித்தேன் என்றால், 2024 இல் ஆரம்பத்தேன் தேதி நினைவில்லை.

மாதம் நினைவு உள்ளதா என்றால், இல்லை. 25.11.2024 ஆம் தேதியில் தான் நான் மேற்சொன்னவாறு ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால், நினைவில் இல்லை. மேற்சொன்ன ஒப்பந்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் மேற்சொன்ன தேதி குறித்த விவரம் தெரியவரும் என்றால், சரிதான். நான் கிரையம் வாங்கிய பின் எவ்வளவு நாட்களுக்கு பிறகு எதிரியின் மனைவி புதிதாக மளிகை கடை ஆரம்பித்தார் என்றால், நான்கு மாதம் கழித்து ஆரம்பித்தார்.

4. எதிரியின் மனைவி என்னுடைய கடை அமைந்திருக்கும் பகுதிக்கு அருகிலேயே கடை ஆரம்பித்ததால் நான் திறப்பு விழாவிற்கு செல்லவில்லை என்றால், சரியல்ல. அதனால் நான் அவர்கள் மீது கோபம் கொண்டு பேச்சுவார்த்தை இல்லை என்றால், சரிதான். மேற்படி கடை திறப்பு விழாவிற்கு பிறகு எதிரியுடன் நான் போன் மூலமுமோ, நேரிலோ பேசவில்லை என்றால், சரியல்ல. எனது மற்றும் எதிரியின் தொலைபேசி அழைப்புகளின் விவரங்களை பார்த்தால் நான் பேசியதாக சொல்லப்படும் விவரம் தெரியவரும் என்றால், சரிதான். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியான 25.04.2025 ஆம் தேதி எதிரி பணியில் இருந்தாரா அல்லது விடுப்பில் இருந்தாரா என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியும், பணியில் இருந்தார்.

5. எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால், மாலை 04.40 மணிக்கு கொடுத்தேன். அச்சமயம் பள்ளி முடித்து செல்லும் நேரம் என்பதால் ஊர் முக்கியஸ்தர்கள் யாரவது இருந்தார்களா என்றால், இல்லை. ரூபாய். ஐந்துலட்சம் காசோலை தொகை எவ்வாறு வந்தது என புகாரில் சொல்லவில்லை என்றால், சரிதான். ரூபாய் ஐந்து லட்சம் பணம் கொடுத்ததாக சொல்லப்படுவதற்கு ஆதரவாக புரோநோட்டு, பத்திரம், அல்லது இரசீது எதுவும் எழுதி வாங்கவில்லை என்றால், சரிதான். நான் கொடுத்ததாக சொல்லப்படும் ஐந்து லட்சத்திற்கான நோட்டுகளின் விவரம் (ரூ.100, ரூ.500, etc) விவரம் புகாரில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். புகாரிலும், பிரமாண பத்திரிக்கையிலும் உள்ள கையொப்பமும், காசோலையில் நிரப்பப்பட்டுள்ள கையொப்பமும் ஒரே மாதிரியாக உள்ளது என்றால், காசோலையில் நிரப்பப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையது இல்லை.

6. காசோலையை எந்த தேதியில், எங்கு வைத்து, யார் கொடுத்தார்கள் என்றால், தேதி நினைவில்லை 2025 ஆம் ஆண்டு எனது ஊரில் பள்ளிக்கு வெளியில் வைத்து கொடுத்தார். காசோலை நிறைவேற்றியதாக சொல்லப்படும் தேதியான 21.07.2025 ஆம் தேதி எதிரி மருத்துவ விடுப்பில் இருந்தார் என்றாலும், அன்று அவர் பள்ளிக்கு வரவில்லை என்றாலும், எனவே அன்றைய தினம் அவர் எந்த காசோலையும் எனக்கு கொடுக்கவில்லை என்றாலும், சரியல்ல. நான் புகாரில் எதிரியின் வங்கி கணக்கு எண் என குறிப்பிட்டுள்ள SBI 20402160094 கணக்கு எண் எதிரிக்கு சொந்தமானது அல்ல என்றாலும், வழக்கு காசோலை எதிரிக்கு சொந்மானது அல்ல என்றாலும், சரியல்ல. நான் புகாரில் குறிப்பிட்டுள்ள வங்கி கணக்கு எண் எதிரியின் மனைவி திலகவதி என்பவருக்கு சொந்தமானது என்றால், எனக்கு அது பற்றி தெரியாது.

7. நான் தாக்கல் செய்துள்ள காசோலையும் எதிரியின் மனைவி திலகவதிக்கு சொந்தமானது என்றால், இல்லை காசோலையில் குமார் என கையொப்பம் செய்யப்பட்டிருந்தது. மேற்சொன்ன கையொப்பம் எதிரி செய்த கையொப்பம் இல்லை என்றாலும், இவ்வழக்கிற்காக என்னால், எதிரியின் கையொப்பம் போல் ஜோடிக்கப்பட்ட கையொப்பம் என்றால், சரியல்ல. எதிரிக்கு திருச்சியில் சொந்தமாக வீடு உள்ளது என்றால், அதுபற்றி தெரியாது. நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலத்தில் எதிரிக்கு எந்தவித கடன் பெற வேண்டிய தேவையும் ஏற்படவில்லை என்றால், சரியல்ல. பொருளாதர ரீதியாக என்னை விட, எதிரியும், எதிரியின்

மனைவியும் வலிமை பெற்றவர்கள் என்றால், அதுபற்றி தெரியாது.

8. என்னிடம் கடன் வாங்க வேண்டிய எவ்வித அவசியமும், தேவையும் எதரிகளுக்கு ஏற்படவில்லை என்றால், சரியல்ல. ரூ.ஐந்து லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு தகுதி இல்லை என்றால், சரியல்ல. எதிரி வருமான வரி கணக்கு தாக்கல் செய்து வருகிறார் என்றால், அதுபற்றி தெரியாது. வழக்கு காசோலையின் உரிமையாளர் எதிரி இல்லை என்பதால் வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றால், சரியல்ல. எதிரியின் மனைவி என்னுடைய கடை அமைந்திருக்கும் பகுதிக்கு அருகிலேயே கடை ஆரம்பித்ததால் அவர்கள் மீது கோபம் கொண்டிருந்தேன் என்றால், சரியல்ல. எதிரியின் மனைவிடம் இருந்து கிரையம் வாங்கும் பொழுது அந்த மளிகை கடையில் இருந்த எதிரியின் மனைவிக்கு சொந்தமான காசோலையை நான் எடுத்து வைத்துக்கொண்டு எதிரியும், அவரது மனைவியும் ஆரம்பித்த மளிகை கடையை முடவேண்டும் அவ்வாறு செய்யாவிட்டால் அந்த காசோலையை வைத்து பொய் வழக்கு போடுவேன் என்று எதிரியை மிரட்டினேன் என்றால், சரியல்ல.

9. எதிரி அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருவதால் அவரிடம் இருந்து பணம் பரிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எதிரி பணிபுரியும் அதே பள்ளியில் நானும் பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவராக இருப்பதாலும், எதிரி ஏற்கனவே கையொப்பம் செய்துள்ள ரூ.100 அசல் பத்திரம் என்னிடம் இருப்பதால் அதில் உள்ள கையொப்பத்தை பார்த்து நானாகவே காசோலையில் எதிரியின் கையொப்பத்தை போட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. வழக்கு காசோலைக்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும், எதிரி எந்த காலத்திலும் என்னிடம் பணம் வாங்கவில்லை என்றாலும், சரியல்ல. இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கது அல்ல என்றாலும், தள்ளுபடி செய்யவேண்டிய ஒன்று என்றாலும், சரியல்ல. வழக்கு காசோலை உண்மையான உரிமையாளர் மீது வழக்கு தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என்றால், சரியல்ல.

**மறு விசாரணை:**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்து செய்தார்.

**//sd//– Tmt.M.SATHATHUNISHA, B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், இலுப்பூர் .**